# ICAR Krishi Vigyan Kendra

## (Hosted by CREED)

### Ariyalur District

## May 2026 Month Activities

Date: 01.05.2026

Village: Kaduvetti of Jayankondam block.

**Event: Method demonstration of raised bed mat nursery preparation**

Details:

1. Conducted method demonstration of mat nursery preparation towards promotion of mechanisation in paddy cultivation
2. Awareness created on balanced use of fertilizers for improving soil health and reducing production cost.
3. Discussion made among the farmers on constration in paddy cultivation during kuruvai season.

No of farmers: 8 nos
Team: SSH & SMS (Ag & Hort)



Date: 01.05.2026

**Event: News paper article on Nutritive value of Cashew Apple and importance of Value addition in economic development**

Team: SS&Head & SMS (H.Sc)

புதிய சந்தை அணுகுமுறை மூலம்

# முந்திரி ஆப்பிள் விவசாயத்தின் மூலம் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கலாம்

## வேளாண் அறிவியல் மையம் விளக்கம்



தா.பழூர், மே 1: திட்டமிடல், தொழில்நுட்பம் மற்றும் சந்தை அணுகுமுறை மூலம், முந்திரி விவசாயத்தில் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கலாம்.

தமிழகத்தில் முந்திரி பயிரிடுதல் பரவலாக உள்ளது. நம்மில் பலருக்கு முந்திரி கொட்டை தெரிந்திருக்கும். ஆனால் எத்தனை பேர் முந்திரி ஆப்பிளை பயன்படுத்துகிறோம்? உண்மையில், அறுவடை செய்யப்படும் ஒவ்வொரு 1 கிலோ முந்திரி கொட்டைக்கும் சுமார் 8 முதல் 10 கிலோ முந்திரி ஆப்பிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முந்திரி விதையைப் பெறுவதற்காக மரங்கள் வளர்க்கப்பட்டாலும், அதன் துணைப் பொருளான முந்திரி ஆப்பிள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது. உண்மையில், இந்த முந்திரி ஆப்பிள் சத்துக்களால் நிரம்பியதுடன், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் அளிக்கும் திறன் கொண்டது.

அரியலூர் மாவட்டம் தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் முந்திரி முக்கியத்துவம் மற்றும் மதிப்புக்கூட்டல் குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப வழிமுறைகள் வழங்கி உள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாட்டில் முந்திரி பயிரிடலில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் சுமார் 30,000 ஹெக்டேருக்கு மேல் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது. முந்திரி மரத்தில் கிடைக்கும் ஒவ்வொரு விதைக்கும் ஒரு முந்திரி ஆப்பிள் உருவாகும்.

ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 400-500 கிலோ முந்திரி விதை கிடைத்தால், அதைவிட 5 மடங்கு ஹெக்டேருக்கு முந்திரி ஆப்பிள் 2000-2500 கிலோ கிடைக்கும். அரியலூர் மாவட்டத்தில் 30,000 ஹெக்டேர் முந்திரி சாகுபடி நடைபெறுகிறது. இதனால் மொத்த உற்பத்தி 6,00,00,000 - 7,50,00,000 கிலோ (அதாவது 60,000 - 75,000 டன்) ஆகும். 1 கிலோ முந்திரி ஆப்பிளில் இருந்து சுமார் 500 மில்லி ஜூஸ் எடுக்கலாம்.

முந்திரி பழம் என்று அழைக்கப்படுகின்ற முந்திரி ஆப்பிள் ஒரு பொய்க்கனி ஆகும். நன்கு பழுத்த பழங்கள் மஞ்சள் அல்லது சிவப்பு நிறமுடையதாக இருக்கும். முந்திரி பழங்கள் அதிக சாறு கொண்டவை. பழங்களில் 80-85 சதவீதம் சாறும், சாற்றில் 10 சதவீதம் சர்க்கரையும் உள்ளன.

இப்பழங்களில் மற்ற பழங்களைவிட உயிர்ச்சத்து 'சி' (Vitamin C) ஐந்து மடங்கு அதிகமாக உள்ளது. கால்சியம், இரும்புச்சத்து போன்ற ஊட்டச்சத்துகளால் செறிந்தது. இது உடல் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. மேலும், ஜீரணத்திற்கு உதவும் நார்ச்சத்து இதில் அதிகமாக உள்ளது. இதன் இயற்கை சுவை காரணமாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவாகும்.

100 கிராம் முந்திரிப் பழங்களில் உள்ள சத்துக்கள் 86.3 கிராம் கால்சியம், 10 மி.கி புரதச்சத்து, 0.2 கிராம் வைட்டமின் 'சி', 180 மி.கி கொழுப்புச்சத்து, 0.1 கிராம் பாஸ்பரஸ், 10 மி.கி தாது உப்புக்கள், 0.2 கிராம் இரும்புச்சத்து, 0.2 மி.கி நார்ச்சத்து, 0.9 கிராம் கரோட்டின், 23 மி.கி கார்போஹைட்ரேட், 12.3 கிராம் தயாமின், 51 கி. கலோரி ரிபோபிளேவின் உள்ளது.

முந்திரிப் பழங்களை நாம் உண்ணும் போது தொண்டையில் ஒருவித கரகரப்புத் தன்மை உண்டாகிறது. இதற்கு காரணம் பழத்தில் உள்ள அமிலத் தன்மையாகும். எனவே, தொண்டையில் ஏற்படும் கரகரப்புத் தன்மையை போக்க முந்திரி பழங்களை 5 நிமிடங்கள் நீராவியில் வேக வைத்து, குளிர்ந்த நீரில் கழுவி, பின் பயன்படுத்தலாம். அல்லது கொதிக்கும் 2 சதவீத சாதாரண உப்பு கரைசலில் பழங்களை 4-5 நிமிடங்கள் ஊற வைத்து, பின் பயன்படுத்தலாம்.

முந்திரி ஆப்பிளின் பயன்பாடு தற்போது மிகவும் குறைவாகவே உள்ளது. சேகரிப்பு சிரமம், குறுகிய காலத்தில் கெட்டுப்போகும் தன்மை (short shelf life), போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் இது பெரும்பாலும் வீணாகிறது.

முந்திரி ஆப்பிளில் இருந்து ஜூஸ் மற்றும் ஸ்க்வாஷ் ஜாம், ஜெல்லி சிரப் மற்றும் கன்சன்ட்ரேட் முந்திரி ஆப்பிள் வைன், வினிகர் உலர்ந்த முந்திரி ஆப்பிள் (Dehydrated products) மிட்டாய், ஹல்வா போன்ற இனிப்புகள் தயாரிக்கப்படுகிறது.

இந்தத் தயாரிப்புகள் நீண்ட நாட்கள் சேமித்து வைக்கப்படுவதுடன், சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. குறிப்பாக பெண்கள் சுய உதவி குழுக்கள் (SHGs) மூலம் இத்தகைய சிறு தொழில்களை ஆரம்பித்து, குடும்ப வருமானத்தை உயர்த்த முடியும்.

இதுவரை புறக்கணிக்கப்பட்ட முந்திரி ஆப்பிளை, ஒரு மதிப்புள்ள வருமான வளமாக மாற்றுவது காலத்தின் தேவை. சரியான திட்டமிடல், மதிப்பூட்டல், தொழில்நுட்பம் மற்றும் சந்தை அணுகுமுறை மூலம், முந்திரி விவசாயத்தில் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கலாம்.

கிராமப்புற வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் இது ஒரு முக்கியமான முன்னேற்றமாக அமையும் என கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகு கண்ணன் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் சோபனா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

Date: 03.05.2026

**Event: News paper article on Banana cultivation technologies and Practices to combat summer season.**

Team: SS&Head & SMS (Horti)

உடற்பயிற்சி, கலாந்து கூறினார்கள். மேலும் காவ கலந்து கொண்டனர்.

அதிக காற்று வீசும் போது

# வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்து தாங்கும் முறை குறித்து வழிமுறைகள்

## வேளாண் அறிவியல் தொழில் நுட்ப வல்லூர் விளக்கம்



தா.பழூர்,மே 3: அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் வாழை சாகுபடி மேற்கொண்டு உள்ளனர். இந்த வாழை கோடை காலத்தில் திடீர் மழை மற்றும் காற்று காரணமாக பாதிப்பு ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்து வைக்க வேண்டிய தொழில்நுட்ப வழிமுறைகள் வழங்கி உள்ளனர்.

அதிவேகத்துடன் காற்று வீசும் இடங்களில் வாழைச் சாகுபடி செய்வதை தவிர்க்க வேண்டும். காற்றின் வேகம் மணிக்கு 30 கிமீ-ஐ விட அதிகரிக்கும் போது, மரங்களின் ஆட்டத்தால், வேர்கள் அறுபட்டு சேதமடையும், இலைகள் நடு நரம்பின் இருபுறமும் குறைந்தது 10 செ.மீ அகலத்தில் பட்டை பட்டையாக கிழியும். காற்றின் வேகம் 45 கிமீ-ஐ விட அதிகமாகும் போது இலைகள் 5 செமீ-க்குக் குறைவான அகலத்தில் பட்டை பட்டையாகக் கிழியும். இதனால், வாழையில் ஒளிச்சேர்க்கை தடைபெறுவது குறைவதால் வளர்ச்சியில் பாதிப்பு உண்டாகி, குறிப்பிடத்தக்க மகசூல் இழப்பு ஏற்படுகிறது. காற்றின் வேகம் 50 கி.மீ-ஐ விட அதிகமாகும் போது, மரம் முழுவதும் வேரோடு சாய்ந்து விடும் அல்லது, தண்டின் நடுப்பகுதியில் ஒடிந்து விழுந்து விடும். இதனால், அதிகமான பொருளாதார சேதம் ஏற்படுகிறது. குறிப்பாகத் தமிழ் நாட்டில் சித்திரை மாதத்தில் (ஏப்ரல்-மே) சித்திரைச் சுழி எனப்படும் சூறாவளி காற்று வளிமண்டல மேலடுக்கில் ஏற்படும் வெப்பமாற்றத்தால் அங்குமிங்குமாக ஏற்படும். அச்சமயம், வாழை மரங்கள் மிக அதிக அளவில் அழிந்து, வாழை விவசாயிகள் மிகப்பெரிய அளவில் பொருளாதார சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள். பொதுவாக, தைப்பட்டத்தில் (ஜனவரி-பிப்ரவரி) நடவு செய்யப்பட்ட வாழை மரங்கள் சித்திரைச் சுழிக் காற்று ஏற்படும் போது, இரண்டு மாத வயதுடைய கன்றுகளாக இருப்பதால், இத்தகைய சேதத்திலிருந்து தப்பித்து விடுகின்றன. ஆகவே, சித்திரைச் சுழியைக் கருத்தில் கொண்டு, வாழை நடவு பருவத்தை மாற்றியமைக்க வேண்டும்.

வாழை குலைதள்ளும் சமயத்தில், சற்று மிதமான காற்றைக் கூட தாங்காமல் வாழை மரங்கள் முறிந்து விழ வாய்ப்புள்ளது. ஆகவே, திடமான மூங்கில் அல்லது சவுக்கு கட்டைகளை கொண்டு குலைக்கு எதிர்புறமாக முட்டு கட்ட வேண்டும். மேலும், மரத்தைச் சுற்றி மண் அணைக்க வேண்டும். வாழையில் மூங்கில் அல்லது சவுக்கு கட்டைகளைக் கொண்டு முட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக, குறைந்த செலவில், கயிற்றைக் கொண்டும் வாழை மரங்களை ஒன்றுடன் ஒன்றைக் கட்டி பாதுகாக்கலாம். இம்முறையில் வாழை மரங்களுக்கு நடுவில் ஆப்பு அடித்து, அதனைச் சுற்றியுள்ள மரங்களைக் கயிற்றினால் இழுத்துக் கட்டலாம் அல்லது ஒரு மரத்தின் அடிப்பகுதியையும், அடுத்துள்ள மரத்தின் கழுத்துப் பகுதியையும் கயிற்றால் இணைத்துக் கட்டலாம்.

மாற்று முறையாக, வாழை மரங்களுக்கிடையே கட்டுக்கம்பியைக் கட்டி மரங்கள் சாயாமல் தடுக்கும் முறை சிறந்த பலனை அளிக்கிறது.

இம்முறையில், முதலில் ஒவ்வொரு மரத்தின் கழுத்துப் பகுதியைச் சுற்றி 7 அடி உயரத்தில், மணிக்கயிற்றைக் கட்ட வேண்டும். பின்பு, மரத்திற்கு மரம் நான்கு திசைகளிலும் 18 காஜ் கட்டுக் கம்பியைக் கட்ட வேண்டும். தற்சமயம், கம்பிக்குப் பதிலாக, பிளாஸ்டிக் நாடாவைக் கூட பயன்படுத்துகின்றனர்.

கடைசியில், ஓரங்களிலுள்ள வாழை மரங்களை தரையில் அப்பு அடித்து (மின் கம்பங்களில் உள்ள ஸ்டே கம்பியைப் போல்) ஸ்டே கம்பியைப் பலமாக கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால், காற்று எத்திசையிலிருந்து அடித்தாலும், மரங்கள் சாய்வதில்லை. இம்முறையானது, வாழைத்தாரின் எடை 15-18 கிலோக்கு மிகாமல் இருக்கும் நேந்திரன், கதலி (ஏழரசி) போன்ற இரகங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது. மேலும் இது தொடர்பான சந்தேகங்களுக்கு விவசாயிகள் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் ராஜா ஜோஸ்லின், 9786379600 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகுகண்ணன், தெரிவித்துள்ளார்.

Date: 06.05.2026

**Event: News paper article on Practices to combat summer season.**

Team: SS&Head & SMS (Ag)

# கோடைகாலத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பம்

## வேளாண் அறிவியல் மையம் விளக்கம்

தா.பழூர், மே 6: கோடை காலத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பம் குறித்து வேளாண் அறிவியல் மையம் விளக்கி உள்ளது.

அரியலூர் மாவட்டம் தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் விவசாயிகள் கோடைகாலத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப வழிமுறைகள் வழங்கி உள்ளனர். இதில் முன்னோர் அனுபவத்தின் அடிப்படையில் 'சித்திரை மாதத்து உழவு பத்தரை மாதத் தங்கம்' என்றனர். இதன் பொருள் சித்திரை மாதத்தில் உழவு செய்து விட்டால், அவ்வுழவின் மூலம் ஏற்படும் தன்மைகளால் அறுவடை மாதமான தை மாதத்தில் நல்ல மகசூல் பெறலாம் என்பதாகும். 'சித்திரை மாதத்து புழுதி உழவு பத்தரை மாற்றுத் தங்கம்' என்கின்றனர். பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் பெய்யும் மழை கோடை மழையாகும். கோடை காலத்தில் நிலத்தின் மேல் மட்ட மண் அதிக வெப்பமடைகிறது. இந்த வெப்பம் கீழ்ப்பகுதிக்கு செல்லும் போது, நிலத்தடி நீர் ஆவியாகி வெளியேறிவிடும். எனவே, கோடை காலங்களில் பெய்யும் மழைநீரானது, மழை நீர் பூமிக்குள் செல்ல வழி ஏற்படுத்தி, நிலத்தில் சேமிக்க கோடை உழவு மிகவும் அவசியமானதாகும். கோடை உழவு செய்யும் போது, உண்டாகும் அதிக காற்றோட்டத்தினால், மண்ணிலுள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளின் எஞ்சிய நஞ்சுகள் சிதைக்கப்படுகிறது. மேலும், காற்று மண்டலத்திலுள்ள நைட்ரஜன் மழை நீருடன் சேர்ந்து மண்ணிற்குள் செல்வதால், மண்ணின் அங்ககச்சத்து அதிகரிக்கும். இந்த உழவு செய்யாத கெட்டியான நிலத்தில் விழும் மழை நீரானது, மண் அரிப்பை ஏற்படுத்தி வேகமாக நிலத்தில் உருண்டோடி, வீணாகிறது.



பெரும்பாலும் மானாவாரி நிலங்களில் மண் கடினமானதாக இருக்கும். உழவு செய்யும் போது, மண் இறுக்கம் குறைந்து, வளம் பெருகும். காற்றோட்டம் அதிகரித்து, நீர் ஊடுருவி நிலத்திற்குள் செல்கிறது. அறுவடை செய்யப்பட்ட அடித்தாள், வேர், மடக்கி உழப்படுவதால், சத்து அதிகரித்து, நன்மை செய்யும் உயிரினங்களின் செயல்பாடுகள் அதிகரிக்கிறது. களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. தீமை செய்யும் பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு, பறவைகளுக்கு உணவாகிறது. ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில், கோடை உழவு செய்வது மிகவும் முக்கியமானதாகும். இதனால், நிலத்தடியிலுள்ள கூட்டுப்புழுக்கள் மற்றும் இதர பூச்சிகளின் முட்டைகள் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு, சூரிய வெப்பத்தின் காரணமாக அழிந்து விடும். மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த கோடை உழவு மிகவும் சிறந்தது. புழுக்கள், அந்துப்பூச்சிகள் மற்றும் மூன்றாம் கட்ட படைப்புழுக்கள் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு, பறவைகளுக்கு உணவாகிறது. பயிர் சாகுபடி செய்யும் வயலைத் தரிசாக சுமார் 2 முதல் 3 மாதம் விடுவதனால் வயலில் உள்ள நூற்புழுக்கள், இரைச்செடியின்றி பயிரைத் தாக்கக் கூடிய வீரியத்தினை இழக்கின்றன அல்லது இறக்கின்றன. இம்முறை மூலம் காய்கறிப் பயிர்களைத் தாக்கக்கூடிய வேர்முடிச்சு நூற்புழுக்களை வெகுவாகக் கட்டுப்படுத்தி பயன்பெறலாம். மேலும் இது தொடர்பான சந்தேகங்களுக்கு விவசாயிகள் கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோசலின் -9786379600 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு சந்தேகங்களை கேட்டுக்கொண்டு பயன்பெறலாம் என முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகு கண்ணன், தெரிவித்துள்ளார்.

Date:06.05.2026
Village: Kvk chlamadevi
**Event:  On campus training on Balanced use of fertilizer with ATMA**

1. On campus training on Balanced use of fertilizer and production of different organic on site inputs to replace chemical fertilizers, use of biofertilzers , green manuring etc were explained. introduction on Natural farming
2. Practical training on preparation of Jeevamirth, Gana jeevamirth, were done
3. Training was supported by ATMA in mobilizing & food.

No of farmers:25
Staff involved: ADA Sendri,SMS Agro,Agr Extension and SMS PP







Date: 7/5/2026

Activity: Diagnostic visit and advisory services

Details:

1. Vegetable crops plays an important role in securing profitable farming at Ariyalur Dt. with the major crops like Drumstick, Brinjal, Bhendi, gourds .

2. In this summer season the pest build up and disease occurance drastically reduces the yield and income.

3. Hence our team visited different vegetable fields like Gourds, chillies, greens at Karaikurichi village, diagnosed for different pests and disease problems and offered Advisories to manage

4. Balanced use of fertilizers to preserve soil health was also emphasized

Team: SSH, SMS (Ag, PP and AS)





Date : 08.05.2026

Event: Newspaper article on Sesame cultivation techniques

14 • Dinakaran • Trichy • 8.5.2026 தினகரன் பெரம்பலூர் / அரியலூ

கோடை காலத்தில் குறைந்த செலவில்

# தொழில் நுட்பங்களை பின்பற்றி எள் சாகுபடியில் ஏக்கருக்கு 500 கிலோ மகசூல் பெறலாம்

வேளாண் அறிவியல் மையம் விளக்கம்



தா.பழூர், மே 8: அரியலூர் மாவட்டத்தில் எள் சாகுபடியானது ஆடிப்பட்டத்தில் மானாவாரியாகவும், கார்த்திகை மற்றும் கோடைப் பட்டத்தில் நீர்ப்பாசன வசதியுடன் (இறவை பயிராகவும்) பயிரிடப்படுகிறது. எண்ணெய் வித்து பயிர்களில் குறைந்த செலவில், அதிக பராமரிப்பு இல்லாமல் நல்ல வருமானம் தருவது எள் சாகுபடியாகும். இதற்கு அதிக நீர் தேவையில்லை என்பதோடு, வெப்பத்தைத் தாங்கி வளரும் தன்மையும் கொண்டது. எனவே, கோடைப் பருவத்திற்கு ஏற்ற பயிராக எள் விளங்குகிறது.

சரியான தொழில்நுட்பங்களைக் கையாள்வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் மகசூல் பெறலாம். இதில் மண் மற்றும் நிலம் தயாரிப்பு எல்லா மண் வகைகளிலும் எள் வளரும் என்றாலும், வண்டல் மற்றும் செம்மண் கலந்த நிலம் மிகவும் ஏற்றது. நெல் அறுவடை முடிந்த வயல்கள் எள் சாகுபடிக்கு மிகச்சிறந்தது நல்ல மகசூல் பெற ரகங்கள் கோடைப் பருவத்திற்கு டி.எம்.வி 7 (TMV 7) மற்றும் வி.ஆர்.ஐ (எஸ்.வி) 4 ஆகிய ரகங்கள் ஏற்றவை.

கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். அடி உரமாக ஏக்கருக்கு 30 கிலோ யூரியா, 60 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 8 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். மாங்கனீசு சத்துக்குறைபாட்டை நீக்க, 2 கிலோ மாங்கனீசு சல்பேட்டை 20 கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் தூவ வேண்டும். விதைப்பு மற்றும் விதை நேர்த்தி ஏக்கருக்கு 2 கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி மற்றும் 200 கிராம் அசோஸ்பைரில்லம் கலந்து விதை நேர்த்தி செய்வதன் மூலம் விதை மூலம் பரவும் நோய்களைத் தடுக்கலாம்.

விதைக்கும் போது சீராக விழுவதற்கு, விதையுடன் சம அளவு மணல் கலந்து தூவ வேண்டும்.

விதைத்த 3-ஆம் நாள் நிலத்தில் ஈரம் இருக்கும்போது, ஏக்கருக்கு பெண்டிமெத்தலின் 38.7 E.C. களைக்கொல்லியை 800 மி.லி அளவு எடுத்து 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். விதைத்த 40 நாட்கள் வரை களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்வது அதிக மகசூலுக்கு வழிவகுக்கும். பயிர் இடைவெளி மற்றும் களைதல் விதைத்த 15 நாட்களில் செடிக்கு செடி 15 செ.மீ இடைவெளி இருக்க வேண்டும்.

25-ஆம் நாளில் வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளி இருக்குமாறு பயிர்களைக் களைத்து விட வேண்டும். இதனால் செடிகளுக்குக் காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் கிடைத்து அதிக கிளைகளும் பூக்களும் உருவாகும்.

எள் பயிருக்கு 2 முதல் 3 முறை தண்ணீர் பாய்ச்சுவதே போதுமானது ஐந்து இலை விடும் பருவம், பூக்கும் பருவம் மற்றும் காய் பிடிக்கும் பருவம் ஆகிய நேரங்களில் கட்டாயம் நீர் பாய்ச்ச வேண்டும். வளர்ச்சி ஊக்கிகள்

பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும், அதிக பூக்கள் பிடிக்கவும் 40-ஆம் நாளில் ஏக்கருக்கு 100 மி.லி பிளானோபிக்ஸ் (NAA 40 ppm) மற்றும் 1% டி.ஏ.பி (DAP) கரைசலை மாலையில் தெளிக்க வேண்டும். 30 மற்றும் 50-ஆம் நாட்களில் சாலிசிலிக் அமிலம் (500 மி.லி/ஏக்கர்) தெளிப்பதன் மூலம் 20% கூடுதல் மகசூல் பெறலாம். பயிர் பாதுகாப்பு (பூச்சி மற்றும் நோய் மேலாண்மை) காய் நாவாய் பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 மி.லி டைமெத்தோவேட் அல்லது அக்னி அஸ்திரம் தெளிக்கலாம்.

இதைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 10 கிராம் பேசிலஸ் சப்டிலிஸ் அல்லது 2.5 கிராம் கார்பெண்டாசிம் வெட்டப்பின் சல்பர் கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 1 கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து 30-ஆம் நாளில் இட வேண்டும்.

அறுவடை மற்றும் பின்செய் நேர்த்தி 90 முதல் 120 நாட்களில் அறுவடை செய்யலாம். தண்டுப் பகுதியின் அடிப்பகுதியிலிருந்து 10-வது காயை உடைத்துப் பார்த்தால் கருப்பு அல்லது பழுப்பு நிறமாக மாறியிருந்தால் அதுவே அறுவடைக்குத் தயார் நிலை (வெள்ளை எள்ளுக்கு இது பொருந்தாது) செடிகளை அறுத்து, வட்டமாக அடுக்கி (அம்பாரக் குவியல்) 10-15 நாட்கள் காய வைக்க வேண்டும். இதனால் நுனியில் உள்ள காய்களும் முதிர்ச்சி அடையும். பின்னர் செடிகளைப் பிரித்து 5 நாட்கள் காய வைத்து, தட்டி எள்ளை எடுத்துத் தூற்றினால் சுத்தமான எள் கிடைக்கும்.

இந்தத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் ஏக்கருக்கு 400 முதல் 500 கிலோ வரை கூடுதல் மகசூல் பெற முடியும் என சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் வேளாண் விரிவாக்கம் தொழில்நுட்ப வல்லுநர் அ.ராஜ்கலா தெரிவித்துள்ளார்.

Date: 13/5/26

Event: Radio talks

Details:

Radio talks on 1). Balanced use of fertilizers 2). Technologies to combat the effects of climate change has been delivered and recorded at AIR, Trichy for further broadcast. Also gave two announcement on Algae management in Paddy and Pest management in vegetables during summer season also recorded.

Staff: SSH



Date: 13.05.2026

Village: Venganur of Thirumanur block

Event: Off campus training on forage crop cultivation

Details:

1. Conducted Off campus training on forage crop cultivation among dairy growers.


2. Delivered cultivation of different kinds of new green fodder crop cultivation and its benefits on animal health.

3. Advisory rendered on Kharif season dairy management practices against animal diseases and nutritional disorders.

4. Awareness created on balanced use of fertilizers and Kharif season technologies among farmers.

No of participants: 40

Team : SMS Ag.



ICAR CREED KVK Ariyalur Dt TN

Date : 13.05.2026

Village: Poondi of Thirumanur block.

Event: Off campus training on ICM in Maize

Details:

1. Conducted Off campus training on ICM in Maize cultivation for Kharif season.
2. Awareness created on balanced use of fertilizers among farmers
3. Key notes delivered on Kharif season technologies to get more income through agriculture integration approaches.

No of participants: 32 nos.

Team: SMS Ag.

